

பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
மாத இதழ்
மார்ச் 2013
இதழ் : 11
மலர் 13
நம்முடைய
அக்கிரமங்களினிமித்தம்
அவர் நொறுக்கப்பட்டார்
ஏசா. 53:5



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் 2013 —ம் வருடத்தின் 3—வது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்ததற்காய் அவருக்கு கோடி ஸ்தோத்திரம். கடந்த மாதம் சபையின் ஆராதனைகள், ஊழியங்கள், சாம்பல் புதன், One Day Retreat ஆராதனைகளில் தேவனுடைய பிரசன்னத்தை உணர முடிந்தது. அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருந்தது.

இந்த மாதத்தில் இன்னுமொரு GOOD FRIDAY மற்றும் EASTER நாட்களை காண தேவன் நம் ஒவ்வொருவருக்கும் கிருபை செய்வாராக. இந்த மாதத்தின் சபையின் விசேஷித்த ஆராதனைகளுக்காக ஊழியங்களுக்காக ஜெபிக்கும்படி அன்புடன் வேண்டுகிறேன். சபையின் மூலம் வர இருக்கும் பாஸ்டர் ஜாண்ரோஸ் அவர்களுக்காய் அவர்மூலம் செய்யப்படும் ஊழியங்களுக்காய் ஜெபித்துக் கொள்ளுங்கள். பெரிய வெள்ளி என்றாலே சிலுவை நமது கண் முன் வரும். அருமை நாதர் இயேசுவும் நம் எல்லாரையும் பார்த்து சொல்கிறார், **""ஒருவன் என் பின்னே வர விரும்பினால் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றக்கடவன்""** (லூக். 9:23).

1. நாம் இயேசுவின் பின்னே அல்லது அவரது வழியில் நடக்கிறோம் என்றால் விருப்பத்துடன் சந்தோஷமாய் வரவேண்டும். அதிலே உலக சுகம் இருக்காது. ஆனால் பரம சுகம் தேவ பிரசன்னம் இருக்கும்.

2. தன்னைத்தான் வெறுக்க வேண்டும்:— நமது சுயத்தை வெறுக்க வேண்டும். சுய எண்ணம், சுய பெருமை இந்த உலக வாழ்க்கையில் நான் ஒன்றுமில்லை என்றும் இந்த அந்தஸ்து, கல்வி, செல்வம் எல்லாம் என் தேவன் கிருகையாய் தந்தது, இது என்னால் ஆனது அல்ல என்றும் நினைத்து அதின் மேல் நம் சிந்தையை வைக்காமல் இருப்பது.

3. சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு:— இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு நாளும் தனக்குரிய சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டும். சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்த வேண்டும். தேவன் உலக ஆசீர்வாதங்களைக் கொடுத்தால் சந்தோஷமல்ல, ஆனால் சிலுவை (பாடு) என்றால் முறுமுறுப்பு. சிலுவை நமக்கு நித்திய ஆசீர்வாதங்களைக் கொடுக்கும் (ரோம. 5:3—4). தாவீது சொல்கிறார் **""நான் உபத்திரவப்பட்டது நல்லது அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்கிறேன்""** (சங். 119:71).

4. என்னை பின்பற்றக் கடவன்:— ஒருவன் அனுதினமும் தன்னைத்தான் வெறுத்து அனுதினமும் தனக்குத்தானே மரிக்காவிட்டால், அவன் இயேசுவை ஒருக்காலும் பின்பற்றிவர முடியாது. நாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்களாயும், பரிசுத்த

மனுஷரால் நிந்திக்கப்பட்டும்; ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன். -சங். 22:6

ஆவியைப் பெற்றவர்களாயும் வேத வாக்கியத்தில் ஆழ்ந்த அறிவு கொண்டவர்களாயும் இருக்கலாம். ஆனால் நாம் அனுதினமும் சிலுவையை எடுத்து நமக்கு நாமே சுயத்திற்கு மரிக்காவிட்டால் ஆண்டவர் இயேசுவை பின்பற்றி நடந்திட ஒரு நாளும் முடியாது.

அன்பான சகோதர, சகோதரிகளே! நாம் இந்த நாட்களில் இயேசுவை பின்பற்ற தீர்மானிப்போம். இயேசுவை போல் சாத்தானை ஜெயிப்போம். சிலுவையின் முடிவு தேவ மகிமை. தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

## சிலுவையில் மேன்மை




சிலுவையைக் குறித்தேயல்லாமல்
வேறொன்றையும் குறித்து – மேன்மை
பாராட்டாதிருப்பேனாக

மோட்சத்திற்கு எட்டக்கூடிய ஏணி
இரட்சிப்பின் சிலுவையாய்
இன்றென்றும் இருக்கின்றது.

மனுஷரின் மிஞ்சிய கொடுமையும்
தேவனின் அளவிலா அன்பும்
சிலுவையில்தான் சந்திக்கின்றது.

என்று நீ இயேசுவிற்குள் வருகிறாயோ!
அன்று தான் உன் வாழ்க்கை
தென்றலாய் ஆரம்பமாகின்றது.

இயேசு ராஜாவின் அகோர மரணம்
பூமியியை புதுப்பித்து – அது
மரணத்தையும் வென்று நிற்கின்றது.

சிலுவையில் மொழிந்தவை ஏழு – அதை
சிந்தை செய்து நீ வாழு
பாவத்தை மேற்கொண்டு மீழு
பரிசுத்தரோடு புவி ஆளு.

இரட்சகர் இயேசுவின் கல்வாரியண்டை
வாருங்கள்...
அது வரட்சியான பாறை அல்ல...
அதுவே அழியா வாழ்விற்கு ஏற்ற பாதை.

**– Sis. ஜோன் அசோக்குமார்**

கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே; இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள். _சங். 22:8



# பொறுமை

தேவ செய்தி

கர்த்தர் கிருபையாய் கொடுத்த இந்த பரிசுத்த உபவாச நாட்களில் அநேக பொருத்தனைகளோடும், ஆசீர்வாதங்களுக்காகவும் கர்த்தரிடத்தில் பொறுமை– யோடு காத்திருக்கும் நம் ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே ஆசீர்வதித்து எல்லாவித நன்மையினாலும் நிரப்புவாராக.

சங்கீதக்காரனாகிய தாவீது அவருடைய கூப்பிடுதலுக்கு கர்த்தர் எப்படி கேட்டார் என்று மிக அழகாய் எழுதுகிறார். **""கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்தேன், அவர் என்னிடமாய் சாய்ந்து என் கூப்பிடுதலைக் கேட்டார்""** (சங். 40:1). சாய்ந்து… … ஆம், நம் பிள்ளைகள் நம்மிடத்தில் ஒன்று கேட்க வேண்டுமென்று மிகவும் யோசித்து யோசித்து நடந்து கொண்டிருப்பார்கள். நமக்குப் பிரியமானபடி நடந்து கொள்வார்கள். நாம் எதை சொன்னாலும் உடனே கீழ்ப்படிவார்கள். அவர்கள் கேட்க ஆரம்பிக்கும் போதே அவர்களுடைய தேவையை அறிந்து நாம் நம்மிடமாய் அவர்களை அழைப்போம். தோள் மீது கை போட்டோ, மடியில் அமர்த்தியோ, தட்டிக் கொடுத்தோ அவர்கள் தேவையை அறிந்து அதனை பூர்த்தி செய்வோம். பொல்லாதவர்களாகிய நாம் இப்படி செய்ய நினைக்கும் போது, தாயின் கருவில் நம் எலும்புகள் உண்டாகும் முன்னே நம்மை பேர் சொல்லி அழைத்த தேவன் நம்மை முன் குறித்த தேவன் நம்மிடமாய் சாய்ந்து நம் கூப்பிடுதலைக் கேட்பார் விசுவாசிப்போம், காத்திருப்போம் (பொறுமை), பெற்றுக் கொள்வோம். தேவை… அவருக்கு பிரியமான, பரிசுத்த வாழ்வு வாழ்ந்து இருப்போம்.

இக்கட்டுக் காலத்தில், மனமாடிவான நாட்களில்தான் பொறுமை மிகவும் அவசியம். அன்னாளின் சாட்சியும், சரித்திரமும் சத்தியமானது. இப்படித்தானே பிள்ளையில்லாத அன்னாள் (1சாமு. 1:2) மனமடிவாக்கப்பட்டு அழுது புலம்புகிற அன்னாள் (1சாமு. 1:7) கர்த்தரின் சமுகத்தில் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்து, பொருத்தனை செய்த அன்னாள் (1சாமு. 1:11) அவளுடைய இருதயத்தில் மட்டுமே கர்த்தரோடு பேசுகிறாள், ஜெபிக்கிறாள் (1சாமு. 1:15). கர்த்தர் விண்ணப்பத்தின் சத்தத்தைக் கேட்டார், எப்பொழுது! சில நாள் சென்ற பின்பு அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெற்றெடுத்தாள் (1சாமு. 1:20). பிரியமானவர்களே! பாருங்கள், சில நாள் சென்ற பின்பு கர்த்தருக்காய் காத்திருக்கின்ற அனுபவம் இதுதான். கேட்க ஒரு காலமுண்டு, பெற்றுக் கொள்ள ஒருகாலமுண்டு அதனதனை அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறவர் நம் கர்த்தர். பொறுமையோடு காத்திருப்போம்.

தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும். ஆம், எப்படி நாம் கதவை தட்டவேண்டும் என்று தெரியுமா! என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்கு செவி கொடுக்கிற மனுஷன் பாக்கியவான் (நீதி. 8:34). கர்த்தரின் சமுகத்தில் பாக்கியவானாய் பாக்கியவதியாய் வாழ விரும்புகிற நாம், உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களினால் நிறையப்பட வேண்டுமென்று

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு; நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். –ஏசா. 53:4

விரும்புகிற நாம் அவரின் கதவு நிலையருகே காத்திருக்கணும் (பொறுமையோடு), ஜெபத்தோடு விழித்திருக்கவும் செய்ய வேண்டும். ஆம் அப்பொழுது தானே அவரை கண்டடைவோம், தயவும் பெறுவோம் (நீதி. 8:35). எத்தனையோ காரியங்களுக்காக ஜெபிக்கிற நாம் எந்த அளவு கர்த்தரிடத்தில் பதிலை, பலனை பெற்றுக் கொண்டோம் என்று ஆராய்ந்து அறிவது ஆவிக்குரிய ஆத்துமாவிற்கு மிகவும் பிரயோஜனமானது.

எதையெல்லாம் விதைத்தோம் (ஜெபித்தோம்)! எங்கு விதைத்தோம் (நிலம்)! விதை வீரியமுள்ளதாயும், விதைக்கப்பட்ட நிலம் பண்படுத்தப்பட்டதாயும் இருந்தால் தானே நாம் நீர்ப்பாய்சும் போது முளைத்து, வளர்ந்து, கதிர்விடும் (30, 60, 100 ஆக வளரும்). இப்படித்தான் நாமும் கர்த்தரின் வார்த்தைகளைக் கேட்டு விட்டுவிடாமல் உண்மையும், நன்மையுமான இருதயமாகிய நிலத்திலே காத்துக் கொண்டால் தான் பொறுமையுடனே பலன் கொடுப்போம் (லூக். 2:15), பலன் மிகுதியாய் இருக்கும். ஆம் ஆசைப்படும்படியாய் எல்லாம் நூறாகவே பலன் கொடுக்கட்டும் விசுவாசிப்போம். என் தேவ ஜனமே! நாம் உபத்திரவப்படும்போது பொறுமையை இழந்துவிடுவோம். தந்திரமாக வஞ்சிக்கப்படும்போது ஆதங்கப்படுவோம். நாம் நம்பினோர் கைவிடும்போது கலங்கி நிற்போம். ஆம் வானமும் பூமியும் ஒளிந்து போம் கர்த்தரின் வார்த்தைகள் ஒளிந்து போகாது, நம்மைத் தேற்றும். உபத்திரவப்படுவது நல்லது, கர்த்தரின் பிரமாணங்களை அறிந்து கொள்வோம், பொன்னைப் புடமிடுவது போல, சுடுவதுபோல சோதிக்கப்பட்டாலும் பொன்னிலும் மேலான விசுவாசத்தினாலே, உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள் (லூக். 21:19) என்று கர்த்தரின் வார்த்தை நம்மை தேற்றுகிறதினால் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

ஆவியில் அனலாய் இருப்போம், சத்தியத்தில் உத்தமமாய் இருப்போம், ஊழியத்தில் உணர்வோடு செயல்படுவோம். சோதிக்கப்படும்போது பிரச்சனை வரும் போது கர்த்தரிடத்தில் தாழவிழுந்து வணங்கி ஆண்டவரே என்னிடத்தில் பொறுமையாயிரும் (மத். 18:26) என்று ஜெபிப்போம் கெஞ்சுவோம் கர்த்தர் மனமிரங்குவார், சாட்சி சொல்லி சந்தோஷப்படுவோம். ஆனால் நாம் நம்மிடத்தில் வந்து பாரங்களை பகிர்ந்து கொள்ளுகிறவர்களுக்கு, கடன்பட்டவர்களுக்கு, தயவு எதிர்பார்க்கும் போது மனமிரங்குகின்றோமா! அவர்களின் விண்ணப்பத்தை பொறுமையோடு (பெருமை யாய் அல்ல) ஏற்கிறோமா! கர்த்தரின் பார்வை என்றும், எங்கும், எப்பொழுதும் நம்மீது உலாவிக் கொண்டுள்ளது. நம்முடைய கர்த்தருக்கு பிரியமானபடி நாம் அவரிடத்தில் கேட்டு பெற்று அனுபவிப்பவைகளை நம்முடைய அன்றாட வாழ்விலும் அப்பியாசப்படுத்தி சகோதர, சகோதரிகளாய் அனைவரையும் நேசிப்போமா! மற்றவர்களின் குற்றங்குறைகளை மன்னிப்போமா! ஆம் நாம் எதினால் அளக்கிறோமோ அதன்படிதான் நமக்கும் அளக்கப்படும்.

உலகத்தின் காரியங்களில் சிக்கித்தவிக்கும் நேரங்களில் நாம் நினைப்பது கர்த்தர் ஒரு அதிசயத்தையும், அற்புதத்தையும் செய்ய ஒரு லாசருவும் வேண்டும் (மரித்த லாசருவை உயிர்தெழச் செய்தார்), ஆண்டவரை உபசரிக்க எல்லா வேலையும் செய்த மார்த்தாளும் வேண்டும். எல்லாவற்றிலும் மேலாக தன் பாதத்தில் அமர்ந்து

பொறுமையாய் அவரின் வார்த்தைகளைக் கேட்ட மரியாளும் வேண்டும். பாருங்கள் அவர்கள் மூவரிலும் யாரைக்குறித்து அதிகமாக தியானிக்கிறோம்! **""மரியாள்""**. ஆம் அவள்தான் நல்ல பங்கை தெரிந்து கொண்டாள். பிரியமானவர்களே! அவர் **""பாதம் ஒன்றே வேண்டும் இந்த பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம்...""** என்று அழகாய் ஒரு பாடல்காரர் பாடுகிறார். அவர் பாதத்தில் அமருவோம், காத்திருப்போம், கவலை களை மறப்போம், கர்த்தருக்காய் சாட்சியுள்ள பிள்ளைகளாய் வாழ்வோம். ஆம் அவர் நம்பினோரை கைவிடார். நம் பாதைக்கு தீபமாக இருப்பார்.

ஓட்டப்பந்தயத்தில் ஜெயிக்க பொறுமையோடு யாரும் நடக்கமாட்டார்கள், வீரியத்தோடு வேகமாக ஓடுவார்கள். ஆனால் ஓடும்போது தடம் மாறி ஓடினாலோ, இலக்குமாறி ஓடினாலோ ஜெயிக்க முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக அன்றைய செய்தி முழுக்க இலக்குமாறின வீரனைக் குறித்தே இருக்கும். நம்முடைய விசுவாச ஓட்டமும், கடந்து செல்கின்ற தடமும், அன்றாட ஜீவியமும், நம் இலக்கான பரலோக ராஜ்ஜியம் கிட்டிச்சேர பாரமான யாவற்றையும் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் ஜெயம் பெறுவோம்.

அன்பானவர்களே! நாம் பலவித சோதனைகளில் சிக்கி தவிக்கும் போது, நம் விசுவாசத்தின் பரிட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். அப்பொழுதுதானே **""நீங்கள் ஒன்றும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாய் இருக்கும்படி பொறுமை யானது பூரண கிரியை செய்யக்கடவது""** (யாக். 1:4). கர்த்தர்தாமே தம்முடைய நீடிய சமாதானத்தினாலே நம் ஒவ்வொருவரையும் நிரப்புவாராக! ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. ஜெயசேகர்**

# CHILDREN THOSE WHO WROTE ANSWERS

Sarah
Rashma
Jessly
Sharon Keerthana
Geona Shamy
Joseph Prince
Helen Prarthana
Jainy
Lydia. A
Priscilla
Solomon
Roshan

என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு; என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள். . _சங். 22:18

# இருதயத்திற்கு ஏற்றவரா! 

அவருக்கு அழகுமில்லை; சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது; நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. -ஏசா. 53:2

**““ஈசா என்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி அதன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பி செழிக்கும்””** (ஏசா. 11:1). ஆதாமின் மீறுதலால் ஆண்டாண்டு காலமாய் சாபப்பழியை தலைமேலே சுமந்து கொண்டிருந்த தேவ ஜனங்களை விடுதலையாக்கி, அதற்காக பாவ பரிகாரமாக தன் சொந்த இரத்தத்தையே சிலுவையில் சிந்தி, தன் ஜீவனை சிலுவையில் பலியாக ஒப்புக் கொடுத்து, ஜனங்களை பிசாசின் வல்லமையிலிருந்து மீட்டுக் கொள்ள **““பரலோகத்திலே பிதாவின் சிங்காசனத்திலே செல்லப் பிள்ளையாய் இருந்த இயேசு கிறிஸ்து””**(நீதி. 8:22 – 31) பரலோகமகிமையை துறந்து பூமியிலே வாழ்கின்ற ஜனத்திற்காய், பூமியிலே வந்து பிறப்பதற்கு ஒரு பரிசுத்தமான சந்ததியை தேவன் தேடிக் கொண்டிருந்தார்.

இவ்விதமாக நோக்கும் போதுதான் பாரம்பரியக்கட்டுகளை உதறித் தள்ளிவிட்டு தன் மாமியாராகிய நகோமி ஆதரித்த தேவன் ஜீவனுள்ள தேவன் அவர்தான் என் தேவன் என்று ரூத் விசுவாச அறிக்கை செய்தாள். தேவன் அவளுக்கு அருளிய சுதந்தரவாளியான போவாஸ் அவனுடைய குமாரன் ஓபேத், அவனுடைய குமாரன் ஈசாய் அவர்களுடைய குடும்பத்தை ஆண்டவருடைய கண்கள் கண்டது. ஆண்டவர் பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் ஏசாயா தீர்க்கதரிசி ““ஈசா என்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி அதன் வேர்களிலிருந்து ஒரு கிளை செழிக்கும்”” என்றார். ஈசாயின் சந்ததியிலே தேவன் அவன் குமாரனாகிய தாவீதை தெரிந்து கொண்டு அவனை அபிஷேகம் பண்ணி தன்னுடைய குமாரனாக தெரிந்தெடுத்து முழு இஸ்ரவேலருக்கு ஜெயத்தைக் கொடுக்கவும் தேவன் தாவீதை வல்லமையாக பயன்படுத்தினார். தாவீது தேவனுக்காக பக்தி வைராக்கியம் கொண்டவன். கர்த்தரை எப்பொழுதும் தனக்கு முன்பாக வைத்து எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பவன். தாவீது பாவச்சேற்றில் வீழ்ந்தபோது மனம் உடைந்து கண்ணீர் சிந்தி பாவ அறிக்கை செய்து தேவனோடு ஒப்புரவானான். ஆதலால் தேவன் தாவீதை தன் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டார்.
தினமும் அதிகாலையில் எழுந்து தேவனை தேடுகிற வாஞ்சை அவனிடமிருந்தது. தேவ ஆலயத்தை, தேவ சமுகத்தை அதிகமாக வாஞ்சித்தான். அதனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாவீதின் சந்ததியிலே வந்து பிறந்தார். வெளி. 22:16 – ல் **““நான் தாவீதின் வேரும் சந்ததியும் பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாய் இருக்கிறேன்””** என்றும் வாசிக்கிறோம்.

நமக்கும் இத்தகைய அனுபவம் உண்டா! நம்மை பார்த்து ஆண்டவர் என் இருதயத்திற்கு ஏற்றவனாக கண்டேன்என்றுகூறும் அனுபவம் நமக்கு உண்டா! நம்முடைய ஊழியம், ஜெபம், வேதவாசிப்பு எல்லாமே அவருக்கு பிரியமாக இருக்கின்றதா! நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற வழி–களை பின்பற்றுவோமாக. இயேசுவின் நாமத்தை விசுவாசித்து தொழுது கொள்ளுகிற யாவருக்கும் தேவன் ஐசுவரிய சம்பன்னராய் இருக்கிறார் செழித்து ஓங்கப்பண்ணுகிறார். **““கர்த்தரை நம்புகிறவன் செழிப்பான்””** (நீதி. 28:25) என்று வேதம் கூறுகிறதே. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனே செழிப்பான். தேவனுக்கு கீழ்ப்படிந்து பயந்து நடக்கிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார். தாவீதின் வேராம் இயேசு கிறிஸ்துவை நாம் என்றும் சார்ந்து கொள்ளும் போது நமக்கு கிடைக்கும் பலன்கள் என்னவென்றால்...
1. பரிசுத்தமடைவீர்கள் 2. கனி கொடுப்பீர்கள் 3. ஆவிக்குரிய பெருமை இருக்காது.
1. பரிசுத்தமடைவீர்கள்:– இயேசு கிறிஸ்துவோடு நாம் ஐக்கியம் கொள்ளும்போது வேரானது பரிசுத்தமாயிருந்தால் கிளையும் பரிசுத்தமாய் இருக்கும். அதனால்தான் நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் (1பேது. 1:15) என்றார்.
2.கனிகொடுப்பீர்கள்:–நானேமெய்யான திராட்சசெடி நீங்கள் கொடிகள் என்னில் நிலைத்தி ருங்கள்.ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுதியான

கனிகளைக் கொடுப்பான் என்றார். நாம் அவருடைய வார்த்தையில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப் போல உலர்ந்துபோவோம். அப்படிப்பட்டவர்களை அக்கினியிலே போடுவார்கள் (யோவா. 15:5 — 6) சுட்டெரிக்கப்படுவதுதான் அதன் முடிவு. 3. ஆவிக்குரிய பெருமை கூடாது:— மேட்டிமை சிந்தனையாய் இராமல் பயந்திரு. சுவாபாக்கினைகளை தேவன் தப்பவிடாதிருக்க, உங்களையும் தப்பவிடமாட்டார். பெருமை உள்ளவனுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவனுக்கு கிருபை அளிக்கிறார் (1பேது. 5:5). நாம் தாவீதின் வேராகிய இயேசு கிறிஸ்துவை சுமக்காமல் தாவீதின் வேர்தான் நம்மை சுமக்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளுவோம். கர்த்தர் தாமே தன் கிருபையில் நம்மை மறைத்துக் காப்பாராக. ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
Sis. **டல்சி கருணாகரன்**
**(சகோ. அருண் இம்மானுவேலின் அம்மா)**



## பிப்ரவரி மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. ஜெபா
Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. ராதா இவாஞ்சலின்
Sis. லைசா பொன்னையன்
Sis. ஃப்பிரீடா சிங்
Sis. அனிதா தாஸ்
Bro. ஜாண்
Bro. அருள்மணி
Bro. எட்வின் ஞானத்துரை
Bro. இம்மானுவேல்
Sis. சுகந்தி தம்புகுமார்
Sis. மெர்லின் ஜோன்ஸ்
Sis. ஷர்மிளா ஸ்ரீனிவாசன்
Sis. சாந்தி ஸ்ரீனிவாசன்
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. குமுதினி வில்சன்
Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
Sis. கீதா ஜெயக்குமார்
Sis. பிரியா பிரேம்குமார்
Bro. ஜாண்சன்
Bro. ஆல்பிரட்
Bro. தர்மர்

## சபையின் 2013-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# “பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது”

ரோமர். **6:14**

ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். மத். 24:4

# ANSWER FOR THE QUIZ (FEBRUARY)

| | | |
|---|---|---|
| 1. | Mary | Acts. 12:12 |
| 2. | Priscilla | Acts. 18:26 |
| 3. | Corinth | Acts. 18:1.2 |
| 4. | Tarsus | Acts. 22:3 |
| 5. | Eutychus | Acts. 20:9 |
| 6. | Druscilla | Acts. 24:24 |
| 7. | Herod | Acts. 12:23 |
| 8. | Antioch | Acts. 11:26 |
| 9. | Gamaliel | Acts. 22:3 |
| 10. | Barnabas | Acts. 13:1-5 |

## QUIZ FOR CHILDREN

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. For what reasons did Paul desire to come to Rome?
2. Who is a real Jew?
3. There is none ----------------, no, not one.
4. From where do we get knowledge of sin?
5. What did Abraham not consider when receiving the promise?
6. Therefore we are buried with Him by ------------- into death.
7. How did sin become through the commandment?
8. To whom is there no condemnation?
9. Nay, in all these things we are more than --------------- through Him that loved us.
10. Why didn't Israel attain unto righteousness?

**Note:- ANSWERS can be taken from Romans 1 to 10. Submit your answers to the Sunday School Teachers on or before 15.03.2013.**

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்



- செல்வி. ஜாண்சி ராணி ராஜவேல்
- செல்வி. திவ்யா அருள்மணி
- செல்வி. நிகிற்றா அருண் இம்மானுவேல்
- செல்வி. ஷேர்லி ஸ்ரீனிவாசன்
- செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்
- செல்வி. ஜெஸ்வின் ஆரோக்கியதாஸ்
- செல்வி. அபியா செல்வி தர்மர்
- செல்வி. ஏஞ்சல் ரெத்தினம்
- செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்
- செல்வன். ஜாண் எட்வர்ட்ராஜா
- செல்வன். காலேப் சாலொமோன்
- செல்வன். ஜோஷ்வா பால் பாண்டியராஜ்
- செல்வன். ரையன் சாமுவேல் ஜாண்சன்
- செல்வன். ஜாண்ராஜ் ராஜவேல்
- செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்
- செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்
- சகோதரி. வித்யா வில்சன்
- சகோதரி. இந்திரா ராஜாசிங்
- சகோதரி. சிஜோ ஸ்ரீதர்
- சகோதரி. ஆஸ்லி முத்தையா
- சகோதரி. ஜெனிற்றா ராஜாசிங்
- சகோதரி. கீதா ஜெயக்குமார்
- சகோ. ஜெயக்குமார்
- சகோ. அருள்மணி
- சகோ. சுனில் சுந்தர்ராஜ்
- சகோ. சுனில்
- சகோ. சாமுவேல்
- சகோ. ஜாண் மில்லர்
- சகோ. விசு
- சகோ. ஜாண்போஸ்கோ
- சகோ. அசோக்ராஜ்
- சகோ. யேசுரெத்தினம்
- சகோ. முத்தையா
- சகோ. ராஜா ரவிச்சந்திரன்
- சகோ. லாசர் ராஜமணி
- சகோ. சந்திரகுமார்
- சகோ. பால் டேனியேல்

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



- திருமதி & திரு. ஆசீர்வாதம்
- திருமதி & திரு. லாசர் ராஜமணி
- திருமதி & திரு. சுகுமார்
- திருமதி & திரு. சத்தியநாதன்

அந்த உபத்திரவத்திற்குப் பின்பு சூரியன் அந்தகாரப்படும்; சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும். மாற். 13:24

# மார்ச் 2013 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | செய்தி |
|---|---|
| 03-03-2013 | சகோ. தாமஸ் |
| 10-03-2013 | சகோ. விசு |
| 17-03-2013 | Pr. ஜாண்ரோஸ் ~ A.G சபை ~தமிழ்நாடு |
| 24-03-2013 | குறுத்தோலை ஞாயிறு ஆராதனை |
| 31-03-2013 | ஈஸ்டர் ஆராதனை (3.45 pm - 5.15 pm) |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 01-03-2013 | சகோ. ஐசக்துரை | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் |
| 08-03-2013 | சகோ. ஜெயசேகர் | சகோ. பிரேம்குமார் |
| 15-03-2013 | உபவாச திருவிருந்து ஆராதனை (Pr. ஜாண்ரோஸ்) | |
| 22-03-2013 | Rev. சந்திரன் (ஜெருசலேம் ஊழியம் ~ இந்தியா) | |
| 29-03-2013 | பெரிய வெள்ளி (4.10 pm - 6.30 pm) | |

சங்கிலி தொடர் ஜெபம்: 07-03-2013 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

பொதுமன்றக் கூட்டம்: 08-03-2013 வெள்ளி மாலை 7.00 pm
இடம்: Church House - Fahaheel

முழு இரவு ஜெபம்: 14-03-2013 இரவு 11 மணி முதல் காலை 3 மணி வரை
**செய்தி :_ Pr. ஜாண்ரோஸ் (தமிழ் நாடு)**

பெரிய வியாழன் ஆராதனை: 28-03-2013 - 4.50 pm - 6.25 pm

வாலிபர் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்.

பெண்கள் கூடுகை: 16-03-2013, Sis. ஷீபா அருண்இம்மானுவேல் இல்லம், மங்காஃப்

போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து; சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய ராஜாவே; வாழ்க என்று சொல்லி; அவரைக் கையினால் அடித்தார்கள். _யோவா. 19:2

# ஏன் சந்தேகப்பட்டாய்!

இயேசு பேதுருவை பார்த்து கேட்ட கேள்வி இது (மத். *14:31*). **""அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்""**. இயேசு கடலில் நடந்து வருவதை பார்த்த பேதுரு, தானும் ஜலத்தின் மேல் நடக்க விரும்பினான். இயேசு **"Green Signal"** கொடுக்கவே பேதுரு ஜலத்தின் மேல் நடந்தான். அப்பொழுது காற்று பலமாயிருந்ததைக் கண்ட பேதுரு பயமடைந்தான் அமிழ்ந்து போக ஆரம்பித்தான். ஆண்டவராகிய இயேசுவின் வல்லமையை சற்று மறந்து போனான். காற்றின் பலம் அவனுக்கு பெரிதாய் தோன்றியது.

ஓர் சிறிய நாணயத்தை கண்ணுக்கு அருகே கொண்டு சென்றால் அது பெரியதாய் தோன்றும். அது போலத்தான் சிறிய பிரச்சனைகளை பலூண் போல ஊதி பெரிதாக்கிவிடுகிறோம். அண்டசராசரங்களை படைத்த தேவனின் வல்லமையை மறந்து விடுகிறோம். விளைவு வாழ்க்கையிலே பயம், அவிசுவாசம், தோல்வி. தாவீதின் வாழ்க்கை எப்பொழுதும் பசுமையான புல்வெளியாக இருக்கவில்லை. மரண இருளின் பள்ளத்தாக்கையும் அவன் கடக்க நேரிட்டது. அந்த சூழ்நிலையிலும் கர்த்தரை மேய்ப்பனாக நோக்கினான். ஆதலால் அவன் பொல்லாப்புக்கு பயப்படவில்லை. ஆண்டவரின் தேற்றுதலை ருசித்தான்.

நம்முடைய கண்கள் யாரை நோக்கிக் கொண்டிருக்கிறது? உலகத்தின் பாவங்களையா! பாரங்களையா! அப்படி இருந்தால் நமக்கு கிடைப்பது சந்தேகமும், பயமும், தோல்வியும் தான். சிலுவையில் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவையே நோக்கிப் பார்ப்போம். இயேசு சொன்னார்ஹ **""நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்""** (மத். *21:21*). **""விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்""** (எபி. *12:1*), ஜெயம் பெறுவோம்.

**கிறிஸ்துவுக்குள் அன்புள்ள**
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

---

## சிரி.... சிந்தி

**கண்களைவிட கண்ணீருக்குத்தான் மதிப்பு அதிகம். கண்கள் உலகத்தைக் காட்டும். கண்ணீர் உள்ளத்தைக் காட்டும்.**

**- அஹமதி தமிழ் திருச்சபை**

நீ யூதரின் ராஜாவானால்; உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம்பண்ணினார்கள். லூக். 23:37



# நான் யார்! நீ யார்!

காலங்கள் வேகமாக செல்கிறது. நாமும் புது வருடத்தை துவக்கி லெந்து நாட்களுக்குள் நுழைந்து, இயேசுவின் பாடுகளை நினைத்து உபவாச நாட்களிலிருக்கிறோம். இந்த நாட்களில் நாம் உபவாசம் இருந்து ஜெபித்து, வேதம் வாசித்து ஆலயத்திற்கு சென்று நமது கடமைகளை முடித்துக் கொள்ளுகிறோம். இது ஆண்டவருக்கு உகந்ததாக இருக்குமா! என்று நம்மை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆண்டவருக்கு முன்பு நான் யாராக இருக்கிறேன்! இயேசு பாலகனாக அவதரித்து படுத்திருந்த புல்லணையா! அல்லது அவரை சுமந்து சென்ற கழுதையா! அல்லது அவரை சிலுவையில் அறைவதற்கு நியமித்த கொல்கொதா மலையா! அல்லது அவரை சிலுவையில் அறைவதற்கு உருவாக்கப்பட்ட மரமா! அல்லது அவரது சிரசில் சூடப்பட்ட முட்கிரீடமா! இவைகளில் நான் எந்த நிலையிலிருந்து இயேசுவை பாடுகளுக்கு உட்படுத்துகிறேன் என்று நம்மை நாமே எண்ணிப்பார்க்க வேண்டும்.

இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நம் மீறுதலுக்காக அனுபவித்த பாடுகளை நினைவு கூர்ந்து இந்த காலங்களில் உபவாசத்தைக் கைக்கொள்ளுவது நல்லதுதான். ஆனால் நம்முடைய உபவாசம் எப்படி இருக்கக் கூடாது, எப்படி இருக்க வேண்டும் என்று ஏசாயா 58:3 – 12 வரை உள்ள வேத வசனங்கள் நமக்கு கற்றுத் தருகிறது. நாம் நம்முடைய இச்சைகளின்படி நடவாமலும், நம் சொந்த வேலைகளை கட்டாயமாய் செய்யாமலும், வாதும் துஸ்டத்தனமும் இல்லாமல், (ஏசா. 58:3 – 4) உபவாச நாட்களை நாம் கைக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. ஏசா. 58:6 – 7 –ன்படி நெருக்கப்படுகிறவர்களை விடுவித்து, நுகத்தடிகளை உடைத்து, பசியுற்றவருக்கு ஆகாரம் பகிர்ந்து கொடுத்து, சிறுமையானவர்களை சேர்த்துக் கொண்டு, உணவில்லாதவர்களுக்கு உணவை பகிர்ந்து கொடுத்து உபவாசத்தை அனுசரிக்க வேண்டும் என்று நமக்கு போதிக்கிறது. இதுவே தேவனுக்கு பிரியமான உபவாசமாய் காணப்படும். இவைகளை நம்முடைய வாழ்க்கையிலும் அப்பியாசப்படுத்துவோமாக. மட்டுமல்லாமல், ஆண்டவரே உம்மை சுமந்த கழுதையாகவும், நீர் பாலகனாய் படுத்திருந்த புல்லணையாகவும் நான் இருக்க என்னை வழிநடத்தும் என்று இந்த லெந்து நாட்களில் நம் இருதயத்தை ஆண்டவருக்கு திறந்து கொடுப்போம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
Sis. **கல்யாணி டேனியல்**
**(சகோ. ஜாண்வெஸ்லியின் அம்மா)**

இயேசு யூதருடைய ராஜா என்று கிரேக்கு, லத்தீன், எபிரெயு எழுத்துக்களில் எழுதி; அவருக்கு மேலாக வைக்கப்பட்டது. -லூக். 23:38

# மூடன் யூதாஸ்காரியோத்

யூதாஸ் என்பதற்கு இறைவனின் துதி என்று பொருள். ஸ்காரியோத் என்பதற்கு கொலைகாரன் என்று பொருள். இவன் தந்தையின் பெயர் சீமோன் இஸ்காரியோத். யூதாஸ்காரியோத் யூதேயாவை சேர்ந்த ஒரு யூதன். இவன் கொடியவனும், வஞ்சகனும், மாறுபட்ட பண்பு படைத்தவனுமாயிருந்தான். இயேசுவோடு நெருங்கிப் பழகிய எவரும் எப்பொழுதும் செய்யக்கூடாத கடினமான கொடிய செயலை யூதாஸ்காரியோத்து செய்தான். அதாவது அன்பே வடிவான தூய்மையின் பிறப்பிடமான குற்றமற்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தான். இந்த தீயச் செயலால் சீடர்கள் மட்டுமல்ல உலக மக்கள் அனைவருக்கும் வஞ்சகனாய் அறியக்கூடியவனானான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெரிந்து கொள்ளுதலும் அவருடைய வழிநடத்துதலும் மனித அறிவுக்கு எட்டாத மறை பொருளாகவே இருக்கிறது. அவர் ஏன் தமக்கு எதிராக செயல்படுகிற ஒருவனை தெரிந்து கொண்டார் என்று எண்ணிப்பார்க்கும் போது, வேத வாக்கியம் நிறைவேறும்படிக்கே என்று நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

யூதாஸ்காரியோத் இயேசு கிறிஸ்துவை ஓர் அரசியல் தலைவராகமாறலாம் அல்லது நாட்டுப்பற்று அதிகமாக உள்ளவர் அல்லது இவர் ஓர் புதிய அரசை நிறுவுவார் என்ற தவறான எண்ணங்களினால்தான் இயேசுவிடம் சேர்ந்தான். ஆனால் அவன் அந்த எண்ணத்தை கடைசிவரை மாற்றிக் கொள்ளவில்லை. ஆனால் யூதாஸ்காரியோத்தை தவிர மற்ற சீஷர்கள் இயேசுவை ஒரு போதகராக ஏற்றுக் கொண்டு மிகுந்த அன்பும் ஆர்வமும் அவரிடம் காட்டினார்கள். ஆனால் யூதாஸின் எண்ணமெல்லாம் எதிர் கால ஆட்சியைப்பற்றியதாகவே இருந்தது. ரோம ஆட்சிக்கு எதிரான அரசனை யார் பின்பற்றினாலும் அவர்களோடு சேர்ந்து கொள்ளவே யூதாஸ் விரும்பினான். யூதாஸ் பணப் பையை உடையவனாயிருந்தான் இயேசு அவனை ஒரு பொருளாளராகவே தெரிந்து கொண்டார். யூதாஸ் தோலால் ஆன கோட்டை அணிந்திருந்தான். அதில் சட்டைப் பைகள் இருந்தன. அவற்றை பணப் பையாக யூதாஸ் பயன்படுத்தினான். எல்லா சீடர்களைப் பார்க்கிலும் இவன் தான் புத்தி கூர்மை உடையவனாக இருந்தான். ஆனால் அவன்தன் தாலந்தை தவறாக பயன்படுத்தினான். பண ஆசை அவனுக்கு கண்ணியானது. ஆசீர்வாதம் அவனுக்கு சாபமாக மாறியது. நான்கு நற்செய்தியாளர்களும் யூதாசை கொடியவன் என்றே கூறியுள்ளனர். திருந்திவாழும் நல்மனம் அவனிடத்தில் இல்லாதிருந்தது.

பேதுரு மறுதலித்தான் ஆனால் மனங்கசந்து அழுது மனந்திருந்தினான் இயேசுவை சந்தித்தான். ஆனால் யூதாஸோ இயேசுவிடம் வராமல் பணத்தை எடுத்துக் கொண்டு பிரதான ஆசாரியரிடத்தில் ஓடினான். அங்கு அவனுக்கு ஆறுதலான வார்த்தை கூட கிடைக்கவில்லை. உன்பாடு என்று சொல்லி கைவிட்டனர். யூதாஸ் இயேசுவிடம் வந்திருந்தால் அவனுக்கு மன்னிப்பு கிடைத்திருக்கும். இன்றும் அநேகர் பவத்தை விரும்புகிறபடியால் இயேசுவின் அன்பு நிறைந்த வார்த்தைகளையும் அவருடைய வியக்கத்தக்க செயல்களையும் சாட்சியாக அறிவித்தாலும் பாவத்தின் மீதுள்ள ஈர்ப்பினால் அவர்களுடைய இருதயம் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. இது மனித வாழ்க்கைக்கு ஒரு முழு இழப்பாகும்.

பஸ்கா பண்டிகைக்கு ஆறு நாளைக்கு முன்பு இயேசு லாசரு வாழ்ந்த ஊரான பெத்தானியாவுக்கு சென்றார். அன்று இரவு லாசரு வீட்டில் கர்த்தராகிய

பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்து. -மாற்.15:9

இயேசு கிறிஸ்துவுக்கு இரவு உணவு ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தது. அப்போது லாசரு வின் சகோதரியான மரியாள் இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலை உயர்ந்த நறுமண தைலத்தை ஏறக்குறைய முந்நூற்று இருபது கிராம் கொண்டு வந்து இயேசு வின் காலடியில் பூசி அதனை தன் கூந்தலால் துடைத்தாள். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது. அப்பொழுது யூதாஸ்காரியோத் இந்த தைலத்தை முந்நூறு தெனாரியத்திற்கு விற்று ஏழைகளுக்கு கொடுக்கக் கூடாதா என்று கேட்டான். அவன் உண்மையிலே ஏழைகளின் மீது கொண்ட அக்கறையினால் கேட்கவில்லை. பணத்தின் மேலுள்ள இச்சையினால் கேட்டான். யாரும் இரு தலைவர்களுக்கு பணிவிடை செய்ய முடியாது. ஒருவரிடம் அன்பு கொண்டு மற்றவரை புறக்கணிப்பார்கள். இவ்விதமாக நாமும் கடவுளுக்கும் செல்வத்திற்கும் பணிவிடை செய்ய முடியாது. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி அநேக வேதனைகளால் தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று மிக அழகாக பரி. பவுல் சொல்வதையும் நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

யூதாஸ்காரியோத்தை தொடக்கத்திலேயே சீடர்கள் குழுவிலிருந்து நீக்கியிருக்கலாம். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மிகுந்த இரக்கத்தோடு கூடிய அன்பினால் அவன் மனம் திருந்துவதற்கு பல வாய்ப்புகளைக் கொடுத்தார். ஆனால் அவன் கடைசிவரை திருந்தவே இல்லை. ஒருமுறை இயேசு கிறிஸ்து உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று திட்டவட்டமாக சொன்னார். யாரைப் பற்றி இப்படி சொன்னார் என்று தெரியாமல் சீஷர்களே குழப்பமுற்று ஒருவரையொரு வர் பார்த்தார்கள். இயேசுவின் அன்பின் சீஷனான யோவான் அப்போது இயேசுவின் மார்போடு சாய்ந்திருந்தான். அவன் மேல் இயேசு தனி அன்பு கொண்டிருந்தார். உடனே சீமோன் பேதுரு யோவானுக்கு சைகை காட்டி யாரைப்பற்றி இப்படி கூறுகிறார் கேள் என்றார். யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்டு ஆண்டவரே அவன் யார் என்று கேட்டான். இயேசு மறு மொழியாக நான் யாருக்கு அப்பத்துண்டை தோய்த்து கொடுக்கிறேனோ அவன்தான் என்று சொல்லி அப்பத்துண்டைத் தோய்த்து சீமோன் ஸ்காரியோத்தின் மகனாகிய யூதாஸ்க்கு கொடுத்தார். அவன் அப்பத்துண்டை பெற்றதும் சாத்தான் அவனுக்குள் நுழைந்தான். இயேசு அவனை பார்த்து செய்யப்போகிறதை சீக்கிரமாய் செய் என்றார். இயேசு ஏன் அவனிடம் இப்படி சொன்னார் என்பதை பந்தியில் இருந்தோர் யாரும் புரிந்து கொள்ளவில்லை.

யூதாஸ்காரியோத் நேராக பிரதான ஆசாரியரிடம் சென்று நானே இயேசுவை உங்களுக்கு காட்டிக் கொடுப்பேன் எனக்கு என்ன தர நினைக்கிறீர்கள்? என்று கேட்டான். அவர்களும் முப்பது வெள்ளிக் காசை கொடுத்தார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு அடிமையின் விலை இருபது வெள்ளிக் காசுகள். இயேசுவின் காலத்தில் முப்பது வெள்ளிக் காசுகள். ஜனக்கூட்டம் இல்லாத ஓர் இடத்திலே இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஜெபிப்பதுண்டு. இயேசு தம் சீஷர்களோடு கெதரோன் என்னும் நீரோடையை கடந்து சென்றார். அங்கே கெத்செமனே தோட்டம் இருந்தது. வழக்கம் போல தம் சீஷர்களோடு அங்கு சென்றார். யூதாஸ்காரியோத்திற்கும் அந்த இடம் தெரிந்திருந்தது. ஏனெனில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் அங்கு கூடுவது வழக்கமாக இருந்தது. இயேசு ஜெபித்துக் கொண்டிருக்கும் போது யூதாஸ்காரியோத்தும் படைப்பிரிவினரும் பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பரிசேயர் அனுப்பிய காவலாளர்களும் பந்தங்களோடும்

தடிகளோடும் ஆயுதங்களோடும் அங்கே வந்தார்கள். தமக்கு நிகழப்போகிற அனைத்தையும் அறிந்த இயேசு நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்? என்று கேட்டார். அவரை காட்டிக் கொடுக்க இருந்த யூதாஸும் அவர்களோடு நின்று கொண்டிருந்தான். யூதாஸ் நான் யாருக்கு முத்தமிடுகிறேனோ அவர் தான் இயேசு என்று ஏற்கனவே அவர்களுக்கு சொல்லி இருந்தான். அவன் நேராக இயேசுவிடம் வந்துஹ ரபீ வாழ்க என்று சொல்லி நமது அருமையான ஆண்டவர் இயேசுவை முத்தம் செய்தான். அப்பொழுது கூட இயேசு யூதாஸ்காரியோத்தை பார்த்து சிநேகிதனே என்றுதான் அழைத்தார் (இப்படிப்பட்ட நல்ல தேவனை நீங்கள் எங்கும் காண முடியாது). போர்ச்சேவகர்கள் உடனே இயேசுவை கைது செய்தார்கள்.


பொழுது விடிந்ததும் தலைமை குருக்களும் மூப்பர்களும் இயேசுவுக்கு விரோதமாக பொய் சாட்சிகளை சொன்னார்கள். கடைசியாக யூதர்களை பிரியப்படுத்த மனதுள்ளவனாய் பிலாத்து இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தான். இயேசுவுக்கு மரண தண்டனை கொடுத்ததை காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத் கண்டபோது மனம் வருந்தி பிரதான ஆசாரியரிடமும் மூப்பர்களிடமும் முப்பது வெள்ளிக்காசை திரும்ப கொண்டு வந்து ஒரு பாவமும் செய்யாத குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் நான் பாவம் செய்தேன் என்றான். அதற்கு அவர்கள் எங்களுக்கென்ன நீயே பார்த்துக் கொள்ஹ அது உன்பாடு என்றார்கள். பின்பு அந்த வெள்ளிக்காசை கோவிலில் எறிந்துவிட்டு புறப்பட்டுப் போனான். தலைமைக் குருக்கள் அந்த வெள்ளிக்காசை எடுத்து இது இரத்தத்திற்கான விலையானதால் இதை கோயில் காணிக்கை பெட்டியில் போடுவது முறையன்று என்று சொல்லி கலந்தாலோசித்து அந்நியரை அடக்கம் செய்ய அவற்றைக் கொண்டு குயவன் நிலத்தை வாங்கினார்கள். இதனால் அந்நிலம் இரத்த நிலம் என்று அழைக்கப்படுகிறது. இதைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசி முன்னமே தீர்க்கதரிசனமாக சொல்லியும் இருக்கிறார் (எரே. 19ஹ3 – 6).

யூதாஸை பார்த்தவர்கள் எல்லாரும் இப்படி குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டாயே என்று சொல்லியிருப்பார்கள். யூதாஸ்காரியோத் மனமுடைந்தவனாக தன்னுடைய தவறான செயலுக்காக வெட்கப்பட்டு மனம் நொந்து நாண்டு கொண்டு செத்தான். தன் முடிவை தானே தேடிக் கொண்டான். கல் எத்தனை நாட்கள் தண்ணீரில் இருந்தாலும் அது தண்ணீரை உறிஞ்சுவதில்லை. யூதாஸ்காரியோத்துக்கும் கல்லைப் போன்ற கடின இருதயம் இருந்ததால் ஆண்டவராகிய இயேசுவோடு இருந்தும் அவருடைய போதனைகளைக் கேட்டும், அற்புதங்களை கண்டும், இயேசுவோடு உண்டும் பழகியும், கடைசிவரை மனம் திரும்பவில்லை. தன் மனதை கடினப்படுத்திக் கொண்டான். பசு குடிக்கும் தண்ணீர் பாலாய் கிடைக்கிறது. பாம்பு குடிக்கும் தண்ணீர் விஷமாய் வருகிறது.

இன்று பாவத்தை செய்வதற்கு சந்தர்ப்பம் மட்டுமே முக்கிய காரணம் என்று கூறுகிறோம். பாவத்தில் ஈடுபடுவதின் பலனை சிறு பொழுதில் அறிந்து விடுகிறோம். ஆனால் அந்த குற்றத்தின் வழி எங்கே முடியும் என்று நமக்கு தெரியாது. ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! கர்த்தருக்கு பயந்து நடக்கிற தேவனுடைய ஜனங்களையே தேவன் மேன்மேலும் ஆசீர்வதிப்பார்.

**அன்புள்ள சகோதரன்**
**யேசுநாயகம்**

அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை: அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான். -மத். 27:14



## பிப்ரவரி மாதக் கேள்விகளுக்கு பதில்கள்

1. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன் (2யோவ 9)
2. பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் (1பேது 5:2 – 4)
3. பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவன் அந்திக்கிறிஸ்து. (1யோவ 2:22)
4. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்புகிறார் (2பேது 3:9)
5. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் (1யோவ 2:5)
6. கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளப்போதகர்களும் தந்திரமான வார்த்தைகளை உபயோகப்படுத்துவர். (2பேது 2:1)
7. என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை என்கிறார் (3யோவா 4)
8. தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார். (1பேது 1:20)
9. அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்(1யோவ 2:28)
10. அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.(1பேது 3:4)
11. மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய, இவைகள் உலகத்தினாலுண்டானவைகள் (1யோவா 2:16)
12. தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. (1யோவா 4:9)
13. ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள் (1பேது 1:23)
14. விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் (1பேது 5:9)
15. அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான் (1யோவா 3:24)

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் _ போன்: 94494541

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் _ போன்: 99460225

முள்ளுகளால் ஒரு முடியைப்பின்னி; அவர் சிரசின்மேல் வைத்து; அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து; அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே; வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி; அவர்மேல் துப்பி; அந்தக் கோலை எடுத்து; அவரைச் சிரசில் அடித்தார்கள். _மத். 27:29-30



# பதில் சொல்லுங்க

(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)

1. திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்று தேவன் எந்த சபைக்கு கூறுகிறார்?
2. தள்ளப்பட்ட பெரிய வலுசர்ப்பத்தின் பெயர் என்ன?
3. எதனால் தேவாலயம் நிறைந்தது?
4. எதன் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாய் இருந்தது?
5. நகரத்து மதிலின் 12 அஸ்திபாரங்களும் எவ்வித இரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன?
6. சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகத்தை வணங்கியவர்கள் யார்?
7. யோவான் எதற்காக மிகவும் அழுதார்?
8. பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டபோது அங்கு காணப்பட்டது என்ன?
9. சிவப்பு நிறமுள்ள மிருகத்தின் மேல் ஏறியிருந்த ஸ்திரியின் நெற்றியில் எழுதியிருந்த நாமம் என்ன?
10. இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்களின் தொகை எவ்வளவு?
11. அக்கினிக் கடலில் தள்ளப்பட்டவை எவை?
12. யோவான் சிறு புஸ்தகத்தை தூதனுடைய கையிலிருந்து வாங்கி புசித்தபோது அது எப்படி இருந்தது?
13. ஆட்டுக்குட்டியானவரும் அவரோடே கூட பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்தவர்களும் எந்த மலையின் மேல் நின்றார்கள்?
14. மங்கின நிறமுள்ள குதிரையின் மேல் ஏறியிருந்தவனுக்கு என்ன பெயர்? அவன் பின் சென்றது என்ன?
15. யேசபேலுடைய வேசித்தன ஆவி உள்ள சபை எது?

குறிப்பு:- வேதாகமத்தில் யூதா மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய நிருபங்களில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 15-03-2013 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடே கூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள். மத். 27:38

## JESUS

**J – JOY**
**E – EXCITEMENT**
**S – SATISFACTION**
**U – UNDERSTANDING**
**S – SALVATION**



*- AHMADI TAMIL CONGREGATION*

# ஏற்ற வேளையில்



நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். மத். 27:40

**""அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்கிறார்""** (பிர. 3:11). சந்நியாசி ஒருவர் தனக்கு எண்ணெய் வேண்டுமென்று ஒரு ஒலிவ மரக்கன்றை நட்டார். அன்று இரவு ஜெபத்திலே கர்த்தாவே இந்த ஒலிவ மரக்கன்றின் மெல்லிய வேர்கள் தண்ணீர் குடித்து பெரிதாக இதற்கு மழை தேவை, சிறு தூறலை அனுப்பும் என்று ஜெபித்தார். தேவன் சிறு மழையை பெய்யச் செய்தார். மறுநாள் ஆண்டவரே ஆண்டவரே என் மரத்திற்கு சூரிய வெப்பம் வேண்டும் என்றார்ஹ சூரியனும் பிரகாசித்தது. இப்பொழுது இதன் பாகங்கள் உறுதிபட கடும் பனி வேண்டும் என்றார்ஹ இதோ அந்த சின்ன மரத்தில் பனித்துளி பொழிந்தன. ஆனால் அந்த செடி சாயங்காலத்தில் வாடிப்போனது. இந்த சந்நியாசி தன்னைப் போலொத்த மற்றொரு சந்நியாசியிடம் சென்று தன் கதையை சொன்னார். அந்த சந்நியாசி நானும் ஒரு சின்ன மரம் நட்டேன். இதோ பாரும் அது செழித்து ஓங்குவதைஹ நானோ மரத்தை தேவனிடம் நம்பிக்கையாய் விட்டுவிட்டேன். அதை உண்டாக்கினவர் அதற்கு இன்னது தேவை என்பதை என்னைவிட நன்றாக அறிவார். நானும் ஒரு நிபந்தனையும் வைக்கவில்லை. தேவனே அதற்கு புயலோ, வெயிலோ, காற்றோ, மழையோ எது தேவையோ அதை அனுப்பும். சிருஷ்டித்த நீர் அதன் தேவைகளை அறிவீர் என்று ஜெபித்தேன் என்றார்.

நம்முடைய பிதாவாகிய தேவன் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய் செய்து முடிப்பவர். ஆனால் நாமோ தேவன் இப்படி இப்படிதான் நம்முடைய வாழ்க்கையில் செய்ய வேண்டுமென்று அல்லது ஆசீர்வதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். நாம் விரும்பும் காரியங்கள் நிறைவேறாமல் நாம் விரும்பாத காரியங்கள் நடக்கும் போது தேவன் என்னை ஏமாற்றி விட்டார் என்று நினைக்கிறோம். ஆபிரகாம் கூட இப்படி ஒரு சூழ்நிலையில் மனம் பதறி தேவனிடத்தில் விண்ணப்பம் செய்தார். சாராள் மூலம் தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் தாமதமானபோது ஆகார் மூலம் ஒரு சந்ததியை உருவாக்கி இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக என்று தேவனுக்கு ஒரு ஆலோசனை சொல்லி விண்ணப்பம் செய்தார். இதன் விளைவு அந்த ஆகாரின் நிமித்தமாகவும் மகன் இஸ்மவேலின் நிமித்தமாகவும் அவர் பெற்ற மன உளைச்சல் ஏராளம். இன்னும் இஸ்ரவேலர் அதன் பலனை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர்.

பிரியமானவர்களே! நமது அன்றாட வாழ்விலும் அநேக காரியங்களில் தேவனே நீர் இதை இப்படி செய்யும், அதை அப்படி செய்யும், இந்த படிப்பை படித்தால்தான் என் பிள்ளையின் எதிர்காலம் நன்றாக இருக்கும். இது போன்ற பலவிதமான ஆலோசனை களை தேவனுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறோம். நாம் விரும்புவது தவறல்லஹ ஆனால் அதைவிட மேலான காரியத்தை தேவன் திட்டமும் தெளிவுமாக நமக்காக முன்குறித்து வைத்துள்ளார். ஆகவே சகலத்தையும் நேர்த்தியாய் ஆளுகை செய்யும் தேவனை நம்பி அவர் சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்போம். அவர் நம்மை சரியான வழியில் நடத்தி நமக்குத் தேவையானதை ஏற்ற வேளையில் தருவார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

**அன்புள்ள சகோதரி**

**ஹேனா எசேக்கியேல்**

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

தலைவர்
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

செயலாளர்
சகோ. ஸ்டாலின்
66021072

பொருளாளர்
சகோ. விசு
97686317

பெண்கள் ஐக்கிய தலைவி
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

வாலிப ஐக்கிய தலைவர்
சகோ. அற்புதராஜ்
60692485

**EVERY STEP, EVERY HUMILIATION EVERY STRIKE, EVERY WHIP, EVERY MOCKING, EVERY PIERCING NAIL... YOU WERE ALWAYS ON HIS (JESUS) MIND**



Bro. ஜஸ்டின் & Sis. அனிதா
தம்பதியரின் குழந்தை பிரதிஸ்டை



Bro. ஜாண் வெஸ்லி & Sis. ஜெயக்கொடி
தம்பதியரின் குழந்தை பிரதிஸ்டை

**சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்**

**———(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait**

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

**Church website: www.ahmaditamilcongregation.org**
**Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com**

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048

**Private Circulation only**